தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## 89வது மாநில சீனியர் தடகளப் போட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவி வெள்ளிப்பதக்கம்

89வது மாநில சீனியர் தடகள சேம்பியன்சிப் போட்டிகள் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஜூன் 4-5 தேதிகளில் நடந்தன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இரண்டாமாண்டு வேளாண்மை மாணவி ச. சிபானி உயரம் தாண்டுதல் போட்டியில் பங்குபெற்று 1.63 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். இப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றதால் ச. சிபானி அவர்கள் இந்த ஆண்டு நடைபெறும் தேசிய அளவில் நடக்கும் சீனியர் தடகளப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற மாநில ஜூனியர் தடகள சேம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதலில் தொடர்ந்து மூன்று முறை தங்கம் வென்று சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் தான் முதல் முதலாக சீனியர் பிரிவில் பங்கு கொள்ளும் தகுதி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்